www.padippakam.com

# தமிழின விடுதலைக்கான

# அடிப்படைப் பொது

# வரைமுறைகள்

தமிழ் மக்கள் பாதுகாப்பு பேரவை

படிப்பகம்

www.padippakam.com

## தமிழின விடுதலைக்கான அடிப்படைப் பொது வரைமுறைகள்

இலக்கு இன்றி அம்பு எய்வதில்லை. சேரும் இடம் இன்றி பயணம் தொடங்கப்படுவதில்லை. அதுபோல எதிரிகளற்ற இயக்கமென்று எதுவும் இருக்க முடியாது. உலக வரலாற்று அனுபவத்தை தொகுத்து கடந்தகால இயக்கங்கள் பலவும் தோல்விக் கண்டதன் முதன்மையான காரணத்தை, ''எதிரிகளையும் நண்பர்களையும் இனம் பிரிக்க அவை தவறியதே'' என ஓரறிஞர் கூறியுள்ளார்.

எனவே இலட்சியத்திலும் கொள்கையிலும் தவறிழைக்காமல் இருக்க வேண்டுமானால் எதிரிகளும் சந்தர்ப்பவாதிகளும் துரோகிகளும் ஊடுருவி திசை திருப்பி சீரழித்துவிடாமல் இருக்க வேண்டுமானால் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? தலைமை யார்? பாதை எது? அமைப்பு எது? போன்றவற்றில் திட்டவட்டமான தெள்ளத் தெளிவான வெளிப்படையான அறிவிப்புகள் எந்தவொரு மக்கள் இயக்கத்திற்கும் கட்டாயம் தேவை. இப்பொது வரையறைகளுக்கு பெயரே இயக்கத்தின் கொள்கைத் திட்டம் (Strategy) என்பதாகும். இது எதிரிகளுட்பட அனைவரும் அறிந்த பகிரங்கமானதொன்றாகவே இருக்க முடியும். செயல்முறைத் தந்திரங்கள் (Tactios) படைத்துறை அம்ச நடவடிக்கைகள் போன்றவைகள் மட்டுமே எந்தவொரு இயக்கத்திற்கும் இரகசியத்திற்கு உட்பட்டதாக இருக்க முடியும். இருக்கவும் வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இலங்கையில் தமிழின மக்களின் விடுதலை இயக்கங்களும் இதற்கு விதிவிலக்கு அல்ல.

பைத்தியம் தீர்ந்தால்தான் கல்யாணம் நடக்கும். கல்யாணம் நடந்தால்தான் பைத்தியம் தீரும் என்பது போல், ஒரு பகுதியினர் இனப்பகை ஒழிந்தால்தான் மக்கள் புரட்சி என்றும், மக்கள் புரட்சி செய்தால்தான் இன முரண்பாடு தீர்க்கப்படும் என்றும் வாதிடுகின்றனர். ஆனால், ஒரு மருத்துவ விஞ்ஞானி தீரக்கூடிய பைத்தியமா? அல்லது கல்யாணத்தின் மூலம் தீர்க்கக் கூடிய பைத்தியமா? என்பதை ஆய்வின் மூலம் அறிந்துகொள்வான். அதேபோல உலக வரலாற்றையும், சமுதாயத்தையும் பற்றி விஞ்ஞான பூர்வமாக முதன் முதலில் வரையறுத்துக் கூறியவர் கார்ல் மார்க்ஸ். அவர் ஒரு சமூக விஞ்ஞானி. தொழில் துறையில் உற்பத்தி முறையில் முதலாளித்துவ உற்பத்தி முறையில் இருந்த ஐரோப்பிய நாட்டில் ஒரு வர்க்கத்தட்டை தூக்கி எறிந்து இன்னொரு வர்க்கத்தட்டை ஆட்சிக்கு கொண்டுவந்தவர் லெனின் இவர் ஒரு நடைமுறை சமூக விஞ்ஞானி. உற்பத்தி முறையில் முன்னேற்றமடையாத மூன்றாம் உலக நாடுகளில் புரட்சியை நடாத்தி பாட்டாளி வர்க்க ஆட்சியை நிலைநிறுத்துவதற்குரிய புதிய ஜனநாயகப் புரட்சியை வழிவகுத்தவர் மாவோ. எனவே மார்க்சிய தத்துவத்தின் அடிப்படையில் மார்க்சிய—லெனினிய—மாவோவிச சிந்தனையின் வெளிச்சத்தில் எமது இயக்கமானது எமது நாட்டில் தேசிய இன விடுதலையையும் மக்கள் புரட்சியையும் நோக்கி இயங்கியல் பொருள்

படிப்பகம்

www.padippakam.com



முதல் வாத விஞ்ஞானக்கோட்பாட்டைப் பிரயோகித்து தொடர்ச்சியான நீண்டதொரு போராட்டத்தைத் தொடரும்.

இலங்கையில் தமிழின ஒடுக்கு முறையானது, 1948இல் இருந்து படிப்படியாக அதிகரித்து வருகின்றது. மலையக மக்களின் குடியுரிமை - வாக்குரிமை பாரம்பரிய தமிழர்களின் நிலப்பரப்பு திட்டமிடப்பட்டு 'அபிவிருத்தி' என்ற பெயரில் சிங்கள இன மக்களை குடியேற்றி பறிக்கப்படுதல்—நடுத்தர வர்க்க தமிழின மக்களின் வாழ்வுப் பிழைப்பாகிய நிருவாக சேவையிலும் அதற்குரிய உயர்கல்வி வாய்ப்புக்களிலும் பாதிப்பை ஏற்படுத்துதல்—விவசாய உற்பத்தியில், (அரசுகள் மாறுபட மாறுபட) வாய்ப்புகளும் வயிற்றிலடியும் மாறிமாறி ஏற்படுத்தப்படுதல்—வன்முறையாளர்களை ஒழிப்பது என்ற பெயரில் தமிழின மக்கள் மேல் அரச படையின் பயங்கரவாதம்—இவ்வாறான முகாமையான இன ஒடுக்கு முறையும் அதன் பக்க விளைவாய் உருவாகும் எண்ணற்ற சிக்கல்களும், இலங்கை ஆளும் கும்பலின் ஒடுக்குமுறை ஆட்சியில்; சிங்கள இன மக்களைவிட அதிகமான அளவு ஒடுக்கு முறையை தமிழ் இன மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றதற்கு வழி வகுத்திருக்கின்றது.

ஆனால், இன்று நடப்பில் இருக்கும் இன ஒடுக்கு முறையானது எவ்வாறு தோற்றம் கொண்டது? இதன் சூத்திரதாரிகள் யார்? அவர்கள் அப்படி செய்வதற்குரிய காரணம் என்ன? என்பவை பற்றி எமக்குத் தெள்ளத் தெளிவான சமூகக் கண்ணோட்டம்

படிப்பகம்

www.padippakam.com



இருந்தாலே இன ஒடுக்கு முறையையும் இனப் ஒடுக்கு முறையையும் உடைத்தெறிந்து, மக்கள் ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்த முடியும்.

1505ஆம் ஆண்டளவில் வியாபாரத்திற்காக இலங்கை வந்த போர்த்துக்கீசர் தமது நிபந்தனைகளுக்கு கட்டுப்படாத உள்ளூர் நிலப்பிரபுத்துவ மன்னர்களை ஆயுதம் மூலம் அடிபணிய வைத்து தமக்குரிய சட்டம், ஆட்சி, நீதி, மதம் என்பவற்றை ஏற்படுத்தி தமது கடல் வாணிபத்தைச் செய்யத்தொடங்கினர். இவர்களின் வாணிபமானது கடல்வழி சம்பந்தப்பட்டதால் இலங்கைத் தீவைச் சுற்றிவர 4 மைல் நிலப்பரப்பையே தமது ஆளுகைக்குள் கொண்டு வந்தனர். மையப் பகுதியில் உள்ள தமிழ் மன்னர்களோ, சிங்கள மன்னர்களோ இவர்களால் தோற்கடிக்கப்படவில்லை. தொடர்ந்துவந்த ஒல்லாந்தர்களும் இவ்வாறான தன்மையையே நிலைநிறுத்தினர்.

1796இல் வந்த பிரித்தானிய விரிவாதிக்க சக்தியானது உற்பத்தி செய்து வியாபாரம் செய்யும் கூட்டம் ஆகையால் முழு இலங்கையையும் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவர முயற்சி செய்தது. உள்ளூரில் உள்ள விவசாய பெருந்தோட்ட செய்கைக்கும் கனிப்பொருள்களின் தேவையையும் வேண்டி மையப் பகுதியில் உள்ள மன்னர்களுடன் சமர் புரிந்தது. தமிழின மன்னர்களில் பண்டார வன்னியனும், சிங்கள மன்னர்களில் விக்கிரம சிங்கனும் நிலப்பிரபுக்களாகிய கெப்பெட்டி பொல—— போன்றவர்களும் துலைந்த யுத்தம் புரிந்து தமது ஆட்சியதிகாரத்

படிப்பகம்

www.padippakam.com



யைப் பறிகொடுத்தனர். மலைப் பகுதிகளில் உள்ள காடுகளை வெட்டுவதற்கும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் தென் இந்தியாவில் உள்ள தமிழின ஏழைக் கூலிகளை கொண்டுவந்து குடியேற்றினர்.

இதனால், நாட்டு சுதந்திரத்தையோ மக்கள் புரட்சியையோ செய்யாதபடி இந்தியத் தமிழர்கள் கூலியாட்களாகவும் யாழ்குடாத் தமிழர்கள் அறிவுப் பணி செய்பவர்களாகவும் ஆக்கப்பட்டனர். இதில் உருவாகும் இனப்பகைமையானது பிரிட்டிஷ் ஆளும் கும்பலுக்கு 'தொல்லை' கொடுக்காததாக உள்ள இரண்டு பட்டாளம் அடித்தாடிக் கொண்டாட்டம் என்ற வகையில் பேருதவி செய்தது. இது திறமையானவொரு இராஜதந்திர நடவடிக்கை ஆகும். குருவின் தந்திரத்தை இன்று இலங்கை ஆளும் கும்பல் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் வளர்ந்த ஒரு கட்டமே இன்று இலங்கையின் பிரதான முரண்பாடாகிய இனச் சிக்கல்.

1948இல் ஆட்சியதிகாரமானது பிரிட்டிசாருக்கு சேவை செய்யும் நிலப்பிரபுத்துவ தரகுமுதலாளித்துவ சக்திகளிடமே கை மாறியது. ஆனால் சொல்லப்படும் ஜனநாயகத்தின் பெயரில் பெரும்பான்மை சிங்களவரே அதிகாரத்தில் அதிகளவு பங்கு கொண்டனர். சிங்கள இன மக்கள் உட்பட சகல மக்களுமாக, மக்கள் புரட்சியையோ அல்லது தமிழின மக்களுடன் சேர்ந்து தமிழின மக்களின்

படிப்பகம்

www.padippakam.com



உரிமைகள் விடுதலைக்காகவோ போராடாதபடி மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்டு அநாதைகளாக, அடிமைகளாக, கையாலாகாதவர்களாக ஆக்கப்பட்டனர்.

இதை எதிர்த்து பாரம்பரிய தமிழர்களோ அல்லது புரட்சிகர, சமசமாஜ, கம்யூனிச இயக்கங்களோ வல்லமையான எதிர்ப்புக் கொடுத்து தொடர் போராட்டம் நடாத்தவில்லை. ஒருசில முணுமுணுப்புக்களுடனும் ஒரு சிலர் புதுக்கட்சி தொடங்குவதுடனும் ஓய்ந்தனர். முணுமுணுத்தவர்கள் புரட்சிக்குப் பின்னர் பார்த்துக்கொள்ளலாம் என்றும் புதுக்கட்சி தொடங்கிய தமிழரசுக் கட்சியினர் தமது பாரம்பரிய தமிழர்கள் நலன்களினூடும் பாராளுமன்ற நாற்காலிகளை பகிர்ந்து கொண்டனர்.

இன விடுதலை என்பதன் அர்த்தமே அந்நிய இனத்தின் இனவெறி சக்திகளின் ஒடுக்குமுறை கரங்களில் இருந்து விடுதலையடைந்து தனது சொந்த இன கலாசாரம் வளர வழி வகுப்பதென்பதாகும். இன்றைய உலகமென்பது 500 ஆண்டுகளுக்கு முந்தைய உலகம் அல்ல. முதல் உலக யுத்தம், இரண்டாம் உலக யுத்தம் வரை நடந்து முழு உலகத்தின் மூலைமுடுக்கும் தத்தம் செல்வாக்கு மண்டலங்களாக ஏகாதிபத்தியங்களால் பங்கிடப்பட்டுள்ள ஏகாதிபத்திய யுக உலகமாகும். அதற்கென்றே அமைப்புகளும், எல்லைகளும், கொள்கைகளும் இராணுவத் தளங்களும் சர்வதேச அளவில் நிறுவப்

படிப்பகம்

www.padippakam.com



பட்டு மேலாதிக்கத்திற்காக இரஷ்ய அமெரிக்க வல்லரசுகள் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் உலகமாகும். உலக சமூக வளர்ச்சியில் இந்நிலையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ரஷ்ய அமெரிக்க வல்லரசுகளுக்கு சம்பந்தமற்ற நாடெதுவும், நிகழ்ச்சியெதுவும் இருக்க முடியாது. இரஷ்ய அமெரிக்க வல்லரசுகள் அப்படி இருக்க காரணமே அவைகளுக்கு தங்களைக் காப்பாற்றிக் கொள்ள அப்படியின்றி வேறு வழியில்லை. அதாவது சுதந்திரமான அந்நாடுகள் தங்களின் வளர்ச்சிப் போக்கில் தத்தம் நாடுகளின் இயற்கை கனிவளங்களை இரும்பு, நிலக்கரி, பெட்ரோல் போன்றவற்றை தத்தம் மக்களின் வாங்கும் சக்தியை தீர்ந்துக் கொண்டுள்ளனர். அதனால், பொருளுற்பத்தியை நடாத்த மேலும் மேலும் மூலப்பொருட்கள் அவசியப்படுகின்றன. அப்படி உற்பத்தியாவதும் விற்கப்படாமல் தேங்கி குவிந்துவிடுகின்றன. இந் நெருக்கடியை தத்தம் நாட்டு மக்கள் தலையில் சுமத்தும் முயற்சியையும் அவர்களின் ஒன்றுபட்ட போராட்டங்கள் முறியடிக்கின்றன. அத்துடனின்றி அவர்களின் குறைந்தபட்ச தேவைகளுக்கான போராட்டங்கள் அவைகளின் ஆட்சிகளையே தூக்கியெறிந்துவிடும் புரட்சிகர நிலைக்கு இட்டுச் செல்கின்றன. அதிலிருந்து அவைகள் தப்பவேண்டுமாயின் பொருளுற்பத்தியை நடாத்த வேண்டுமாயின் மேற்கூறிய தேவைகளுக்காக இதர சின்னஞ்சிறிய நாடுகளை, இனங்களை அடிமைப்படுத்தி அவைகளின் சொந்த கைத்தொழில் சிறு தொழில்களையும், வர்த்தகத்தையும் மொழி இன

படிப்பகம்

www.padippakam.com



கலாச்சாரத்தையும் நசுக்கி, தனது மொழி இன கலாச்சாரத்தை திணித்து கொள்ளை அடிக்கின்றன. அதைச் செய்யவே இரஷ்ய, அமெரிக்க வல்லரசுகள் வெறி பிடித்து அலைகின்றன. உலகம் முழுவதும் தளங்களை நிறுவியுள்ளன. எனவே உலகத்தின் மொழி இனங்கள் அனைத்தின் ஒட்டுமொத்தமான எதிரி இரு வல்லரசுகளுமேயாகும்.

ஆனால், இதை செய்வதில் செல்வாக்கு மண்டலங்களை பகிர்ந்து கொள்வதில் இவர்களுக்குள் கடும் போட்டி நிலவுகிறது. அக்காரணத்தால் இவர்கள் ஒவ்வொருவரும் தங்களை, அடுத்தவரின் ஆக்கிரமிப்பு கரங்களில் இருந்து மீட்கும் இன விடுதலையாளர் என்ற பாசவலையை விரிக்கின்றனர். இதை நம்பி ஏமாறும் ஒவ்வொரு பின்தங்கிய இனமும் இவர்களின் சிலந்தி வலைக்குள் வீழ்ந்து மடிகின்றன. இருக்கும் அடிமை தளையிலிருந்து விடுபடுவதாக எண்ணி முன்னிலும் பெரிய புதை சேற்றுக்குள் மாட்டிக் கொள்கின்றன.

பின் தங்கிய நாடுகளும் இனங்களும் குடியேற்ற (காலனிய) அடிமை தளையில் இருந்தபொழுது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு இனத்திலும் உள்ளூர் கைத்தொழில்களும் சிறு தொழில்களும் வர்த்தகமும் மொழி இனக் கலாச்சாரமும் ஒன்றோடொன்று நசுக்கப்பட்டு உள்ளூர்த் தன்மையே தலையெடுக்காமல் தடுக்கப்பட்டது. தங்களின் மொழி இனக் கலாச்சாரத்தை சரக்குகள் இறக்குமதி ஏற்றுமதியை மட்டுமே தொழிலை ஒட்டு மொத்தத்தில் எல்லாவற்றுக்குமாகத்

படிப்பகம்

www.padippakam.com



ஏற்றுக் கொள்ளும் தரகுமுதலாளிகள் நிலப்பிரபுக்கள் சமூகத்தட்டுகள் மட்டுமே வளர்க்கப்பட்டது. வளர விடப்பட்டது .முதல்,இரண்டாம் உலக யுத்தங்களால் அடிவாங்கி, உலக தழுவி மக்கள் எதிர்ப்பை எதிர் கொண்ட குடியேற்ற வாதிகள் வேறு வழியின்றி 'சுதந்திரம்' என்ற பெயரில் அதிகார மாற்றத்தை இந்த தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சமூகத் தட்டுக்களிடையே ஒப்படைத்துச் சென்றனர்.

குடியேற்ற காலத்தில் தனது நாட்டு மக்களை யன்றி தனது மொழி, இன கலாச்சார வளர்ச்சிபற்றி கொஞ்சம்கூட அக்கறையற்று குடியேற்ற எசமானின் மொழி இன கலாச்சாரத்தை ஏற்று சேவை செய்ததின் மூலம் கிடைத்த பிச்சைதான் இன்றும் தனது மொழி இனம்பற்றி அக்கறையற்று 'சுதந்திர' நாடு என்ற போர்வையில் 'அந்நிய உதவி' என்ற பெயரில் அந்நிய அமெரிக்க, இரஷ்ய வல்லரசுகளுக்கு சேவை செய்து வருகின்றது. மொழி இன வளர்ச்சியை நசுக்கி கொள்ளையடித்து வருகின்றது. இச்சக்திகள் தான் இன விடுதலையின் எதிரிகள்.

இரஷ்ய, அமெரிக்க ஏகாதிபத்திய சக்திகளும் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு இனத்திலும் உள்ள தரகு முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ சக்திகளுமே ஒவ்வொரு மொழி இனத்தின் இனவிடுதலைக்கும் எதிரிகளாவர்.

இந்த ஒட்டுமொத்த பார்வையை மக்கள் பெற்று விட்டால் தங்களின் கொள்ளை இன ஒடுக்கல்

படிப்பகம்

www.padippakam.com



நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதால் இதனை எதிர்ப்பதையும் ஒன்றை மூடி மறைத்து நண்பனாக காட்டி மற்றதை மட்டும் எதிரியாக காட்டுவதையும் இச்சக்திகள் தங்களின் இலட்சியமாகக் கொண்டுள்ளனர். எமது நாட்டில் உள்ள தரகு சக்திகள் அதைத்தான் செய்துகொண்டிருக்கின்றன. ஒன்றை மூடிமறைத்து நண்பனாக்கி அவனிடமிருந்து பணம் ஆயுதம் படை உதவி பெற்று மற்றதை மட்டும் எதிரியாக்கி எதிர்ப்பதற்குப் பெயர் இன விடுதலையல்ல. அந்நிய சக்தி ஒன்றிற்கு சேவை செய்யும் இனத்துரோக நாட்டுத்துரோக கைக்கூலித்தனமே ஆகும். வங்கதேசம் — பாகிஸ்தான், சிங்கப்பூர் — மலேசியா போன்ற கொள்ளை அடிக்கும் பரப்பின் பாகப் பிரிவினையே அது.

எதிரிகள் யார் என்று ஒட்டுமொத்தமாக மதிப்பிடாமல் ஒரு பகுதியை மட்டும் எதிரியாக கருதி மறுபகுதியை நண்பனாக கருதி ஒன்றாக அணி சேர்ந்ததால்தான் நடந்த போராட்ட எழுச்சிகளில், புரட்சிகளில் மீண்டும் எதிரிகளின் ஆதிக்கம் தலையெடுத்தது என்ற வரலாற்று உலக அனுபவம் தமிழினத்திற்கும் புதியதல்ல.

தமிழின விடுதலையின் எதிரிகளை வரையறுத்தபின் நண்பர்களை வரையறுக்க வேண்டும். தொழிலாளர்கள் தொடக்கம் தமிழ்த்தேசிய முதலாளிகள் வரை எல்லா சமூகத்தட்டுக்களுமே தமிழின விடுதலையின் நண்பர்களாவர். ஏனெனில், தமிழினத்தின் இச்சமூகத் தட்டுக்கள் அனைத்துமே மொழி இன ஒடுக்கு

படிப்பகம்

www.padippakam.com



முறையால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதனை ஒழித்து தமிழின விடுதலையை சாதிப்பதென்பது இச்சமூகத்தட்டுகள் அனைத்துக்குமே கட்டாயத் தேவை.

எதிரிகளையும் நண்பர்களையும் வரையறுத்தபின் தலைமை தாங்கும் சமூகத்தட்டை வரையறுக்க வேண்டும். உலக அளவில் எல்லா இனங்களின் மொழி இன கலாச்சாரத்தை நசுக்கி அடிமைப்படுத்தி வருவது இரு ஏகாதிபத்தியங்கள் என்றாகிவிட்டபின் அதனை முறியடித்து விடுதலையை சாதிப்பது என்பது பாட்டாளி வர்க்கத் தலைமையொன்றினால் மட்டுமே முடியும். ஏனெனில் அது ஒன்று மட்டுமே நவீன சமுதாயத்தின் தொழில் வளர்ச்சியில் புதிதாகத் தோன்றி தினமும் வளர்ந்து பெருகும் வர்க்கமாகும். இதர தனிச்சொத்து வர்க்கங்கள் அனைத்தும் பட்டாண்டியாகி தினமும் அழிந்துகொண்டிருப்பவை. சகல ஏகாதிபத்தியத்திற்கும் நேரெதிராக நின்று கொண்டு [illegible] எந்தவித சஞ்சலத்திற்கும் ஊசலாட்டத்திற்கும் இடமின்றி போரிட்டுக்கொண்டிருக்கும் வர்க்கமாகும். தமிழ்த் தேசிய முதலாளி உள்ளிட்ட இதர சமூகத்தட்டுக்களிற்கும் இந்த எதிரிகளை எதிர்க்கும் தேவையும் இன விடுதலைத் தேவையும் இருந்தாலும் அவைகள் இவைகளின் நேரடியான பரம எதிரிகளல்லர். இறுதிவரை இன விடுதலைக்கு இட்டுச்செல்பவை அல்ல. நவீன பாட்டாளி உதயமானபின் இன விடுதலைக்குத் தலைமை அளிக்கும் பாத்திரத்தை இழந்து ஊசலாடும் வாலாற்றுத்தன்மை உடையதாய் அது மாறிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com



இந்திய அரசை எதிர்த்த நாகாவின் பீசோ தலைமையும், மீசோராமின் லால்டெங்கா தலைமையும், அசாம் அகாலிகளும், நடாத்தும் போராட்டங்களும் இதனை நிரூபிக்கும்.

பழைய காலத்தில் இன விடுதலை என்பது அந்நிய இன நிலப்பிரபுத்துவ சாம்ராஜ்ய பேரரசுகளை மட்டும் எதிர்க்க வேண்டியதாய் இருந்தது. அன்று அது மட்டுமே இன விடுதலையின் எதிரியாய் இருந்தது. நிலப்பிரபுத்துவ பேரரசு எவ்வளவு பெரிதாக வலுவாக இருந்தாலும் நவீன தொழில் வளர்ச்சி சாதனங்களின் தேசிய முதலாளிகள் முன்னால் தாக்குப்பிடிக்க கூடியதல்ல. எனவே தேசிய முதலாளி தன் இனத்தை திரட்டி போராடி இன விடுதலையை சாதிக்க முடிந்தது. ஆனால் இன்றைய இன விடுதலையின் எதிரிகளோ அந்நிய நிலப்பிரபுத்துவ சாம்ராஜ்ய பேரரசுகளல்ல. மாறாக தேசிய முதலாளிகளைவிட பல மடங்கு நவீன தொழில் வளர்ச்சி அடைந்து வலுவாய் நிற்கும் இரு வல்லரசுகளும் அதற்கு துணைபோகும் தரகு முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் ஆகும். எனவே தன்னைவிட நவீனமான வலுவான வல்லமையைக் கண்டு தேசிய முதலாளி மலைக்கின்றான். மறுபக்கமோ அனைத்து தொழிலாளி தனக்கென தனிக் கட்சியோ இயக்கமோ எதுவுமின்றி தன் இன தேசிய முதலாளியின் எடுபிடியாக ஒன்றிணைந்து அணிதிரண்டுள்ளான்.

ஆனால், இன்றோ விழிப்படைந்து தனது தலைமை சாதிக்க தனிக்கட்சி தனி இயக்கம் தொடங்கி போராடி வருகின்றான். இந்நிலையில், அந்நிய வல்லரசுகளை

படிப்பகம்

www.padippakam.com



தேசிய முதலாளி தூக்கி எறிந்தால் அதன்பின், பாட்டாளி தன்னை தூக்கி எறிந்துவிடுவாரோ என மிரண்டு தன் மொழி இனத்தை நசுக்கும் அந்நிய சக்திகளை துரத்தியடிக்கவும் தயங்குகின்றான். எனவே இறுதிவரையில் உறுதியான இன விடுதலை யுத்த தலைமையை ஏற்கும் நிலையில் தேசியமுதலாளி இல்லை. தமிழ் தேசிய முதலாளிகளின் நிலையும் அதுவே. எனினும் இன விடுதலைத் தேவையால் அச்சமூகத் தட்டுக்களும் இன விடுதலை இயக்கத்தை தொடக்கலாம், நடத்தலாம். ஆனால் அதன் தலைமையிலான இன விடுதலை, பாட்டாளி தலைமையிலான இன விடுதலையிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். இதற்குக் காரணம் இன விடுதலையின் ஒட்டுமொத்த எதிரிகளையும் எதிர்க்கும் அடிப்படை அம்சத்தில் ஒன்றுபட்டாலும், பல்வேறு சமூகத்தட்டுகள் என்ற ரீதியில் நலன்கள் வேறுபடுவதேயாகும். அது பல அம்சங்களிலும் பிரதிபலிக்கிறது.

முதலாவதாக பாட்டாளி வர்க்கம் தனது இறுதி இலட்சியமென்னும் பொதுவுடமை இலட்சியத்தை நோக்கி செல்ல அது இந்த எதிரிகளை எதிர்த்து நடாத்தும் புதிய ஜனநாயகப் புரட்சியின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இன விடுதலை யுத்தத்தை நடாத்துகின்றது. தேசிய முதலாளிகளுக்கோ இன விடுதலைக்கு அடுத்து நடத்தும் புரட்சிகளோ இறுதி இலட்சியமோ இல்லை.

இரண்டாவதாக பாட்டாளி வர்க்கம் சிங்கள இனம் உட்பட எல்லா இனங்களிலுமுள்ள பாட்டாளிகளையும், உழைக்கும் மக்களையும் சகோதரர்களாயும்

படிப்பகம்

www.padippakam.com



நண்பர்களாகவும் தோழர்களாகவும் பார்க்கிறது. அவர்களை விடுவிப்பதில் தனக்கும் பங்குண்டு என கருதுகின்றது. இன்னும் சொல்லப்போனால் தனது விடுதலையே அவர்களின் விடுதலையில் தங்கியிருக்கிறது அடங்கியிருக்கின்றது என்றும், அவர்களையும் விடுவிக்க வேண்டுமென்றும் கருதுகின்றது. அதற்காக அவர்களுடன் ஒன்றுபட வேண்டுமென்றும் கருதுகிறது. அவர்களுடன் ஒன்றுபடவேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. அந்த நோக்கில் சம உரிமைகளும் பிரிந்து செல்லும் உரிமையுமுடைய சுய நிர்ணய உரிமையும் அடைவதே இன ஒடுக்கு முறையை ஒழிக்கும் என நம்புகின்றது. ஆனால், தேசிய முதலாளிகளோ சிங்கள இனத்தின் பாட்டாளி உட்பட்ட உழைக்கும் மக்கள் அனைவரையுமே எதிரியாக கருதுகின்றனர். அந்த இனம் முழுவதின்மீதும் நம்பிக்கையின்றி அக்கறை அற்று இனத்தையே எதிரியாக கருதி அவர்களுடன் ஒன்றுபட முடியும் என்ற நம்பிக்கையின்றி ஒட்டுமொத்தமாக அவர்களிடமிருந்து துண்டித்துக் கொள்ளும் தனிநாடு கோரிக்கையையே முன் வைக்கின்றது.

இருப்பினும் இவர்களுக்கும் இவர்களது தனிநாடு கோரிக்கைக்கும், இன விடுதலையின் ஒட்டுமொத்த எதிரிகளே எதிரிகளாகின்றனர் என்ற காரணத்தால் அதுவும் இன விடுதலையே ஆகின்றது. ஒன்றன் இன ஒடுக்கலை மட்டும் எதிர்த்து மற்றதன் இன ஒடுக்கலுக்கு வழி வகுக்கும் தரகு சக்திகளின் தனிநாடு கோரிக்கையிலிருந்து இது அடிப்படை குணாம்ச ரீதியில் வேறுபட்டது. அதாவது, இன

படிப்பகம்

www.padippakam.com



விடுதலையின் ஒட்டுமொத்த எதிரிகளையும் எதிர்த்து இன விடுதலை அடைய வேண்டிய தேவையிலும் அதற்கான முயற்சியிலும் இருக்க கூடியதென்பதால் இதன் தனிநாடு கோரிக்கை தரகு சக்திகளின் தனி நாடு கோரிக்கையிலிருந்து வேறுபடும் இன விடுதலைத் தன்மையை உடையது. எனவே ஆதரிக்கவேண்டிய நட்பு சக்தியாகிறது.

அடுத்து பாட்டாளி வர்க்கம் ஒன்று மட்டுமே மக்கள் மீது முழு நம்பிக்கை வைத்து, அவர்களைச் சார்ந்து அவர்களைத் திரட்டி படையாக மாற்றி வெற்றி அடையும் மக்கள் யுத்த பாதையை மேற் கொள்ளுவான். ஆனால், தேசிய முதலாளியோ தன் இன மக்கள்மீதுகூட நம்பிக்கையின்றி பணம், ஆயுதத்தின் மீது அதிக நம்பிக்கை வைத்து அதைப் பெறவேண்டி பேரம், சரணடைவைக்கூட செய்வான். எனவே இன விடுதலையின் இறுதிவரையிலான உறுதி யான தலைமையாய் இருக்கமாட்டான். இவர்களின் உறுதியற்ற தலைமையை புரிந்து கொண்டு அதே நேரத்தில் ஒட்டுமொத்த எதிரிகளையும் எதிர்க்கின்ற வரையில் இன விடுதலையம்சம் உள்ளடங்கியிருப்பதால் இவர்களை — இவர்களது தலைமையை அல்ல — ஆதரிப்பதென்பது பாட்டாளி வர்க்கத்தின் கட்டாய கடமையாகிறது.

பொதுவாக இன விடுதலை இயக்கத்தின் எதிரிகளையும் நண்பர்களையும் தலைமையையும் தீர்மா னித்த பின் அதன் இலட்சியத்தை சாதிக்கக்கூடிய பாதையைப் பற்றி பரிசீலிக்க வேண்டி இருக்கின்றது.

படிப்பகம்

www.padippakam.com



இந்தியா இலங்கை போன்ற பின்தங்கிய
வசாய நாடுகளில் பாதை என்பது ஓட்டு பாதையாக
ருக்க முடியாது. காரணமென்னவெனில் இவைகள்
னைத்தும் முன்பு குடியேற்ற நாடுகளாக இருந்தவை
ளாகும். போலியாக சுதந்திரம் என்ற பெயரில்
அந்நிய சக்திகளின் தரகு கும்பல்களே ஆளும்
நாடுகளாகும். எனவே பிரிட்டன், இரஷ்யா போன்ற
சுதந்திர நாடுகளின் சட்டசபை பாராளுமன்றத்தை
உடையவை அல்ல. அதாவது சுதந்திர நாடு என்ற
படியால் ஆங்கில இனம் ஆளும் இனமாயும் அயர்
லாந்து இனம் அடிமை இனமாயும், மாரஸ்ய இனம்
ஆளும் இனமாயும் இதர இனங்கள் அடிமை இனமா
யும் ஆளப்பட்டதுபோன்று ஆளப்படுபவைகள் அல்ல.
அதாவது குடியேற்ற நாடுகளாயிருந்து பின்னர் தரகு
கூட்டத்திடம், ஆட்சியதிகாரமாற்றம் செய்யப்
பட்டிருப்பதால் என்னதான் பாராளுமன்ற சட்டசபை
வேடங்கள் போடப்பட்டாலும், இந்தி இனமோ
சிங்கள இனமோ சுதந்திர ஆளும் இனங்களல்ல.
மாறாக குடியேற்ற தரகு கும்பல்களின் மூலம் அந்நிய
அமெரிக்க இரஷ்ய வல்லரசுகளுக்கு அடிமைப்பட்டுக்
கிடக்கும் இனம். உலக வங்கி நிபந்தனைகளையோ
இரஷ்ய அமெரிக்க வல்லரசுகளையோ மொத்தமாக
எதிர்த்து செயல்பட முடியாமல் அடிமைப்பட்டுக் கிடக்
கும் இனங்களாகும். எனவே இறுதி முடிவை எடுக்கும்
சுதந்திர நாடுகளாயல்லாத நாடுகளின் சட்டசபை
பாராளுமன்றத்தில் பங்கெடுத்துப் பயன் என்ன ?

ஒன்றிணைக்கப்படாத தொழில் வளர்ச்சியை
உடைய கிராமப்புற விவசாயமும், சிறிய அளவிலான

www.padippakam.com



தொழில் வளர்ச்சியும் உடைய எமது நாட்டில் ஒட்டு மொத்த ஆயுத எழுச்சியை நடாத்தமுடியாது (பொது வேலை நிறுத்தம் முதலியன) நாட்டின் எந்த மூலை பாதிக்கப்பட்டாலும் பாதிக்கப்படாத இதர பகுதியைக் கொண்டு வருடக் கணக்கில் எதிரியால் ஒடுக்கு முறையை நடாத்த முடியும். இத்தகைய நாடுகளில் வருடக் கணக்கில் தாக்குபிடித்து எதிரியை வீழ்த்தும் மக்கள் யுத்தப் பாதையையே நாம் மேற்கொள்ள வேண்டும். தொழில் வளர்ச்சி அடைந்த ஏகாதிபத்திய நாடுகளிலேயே ஆயுத எழுச்சிப் பாதையும், சட்டசபை பாராளுமன்ற பங்கெடுப்பும் முன்வைக்க முடியும்.

ஓட்டுப் பாதை என்பது இருக்கின்ற சட்டம், நீதி மன்றம், இராணுவத்தின்மீது நம்பிக்கை வைத்து அகிம்சை முறையில் இன விடுதலையை அடைய முடியும் என்பதாகும். எதிரியின் அமைப்பு ரீதியான ஆயுதபாணியான பயிற்சி பெற்ற இராணுவ வல்லமையை கணக்கில் எடுக்காது பின்பற்றப்படும் தற்கொலை சரணாகதிப் பாதையாகும்.

அடுத்து அமைப்பு பற்றிய பிரச்சனை எழுகிறது. வலுவான எதிரியை எதிர்த்து யுத்தம் தொடுக்க வெளிப்படை அமைப்பு எதையும் எதிரி அனுமதிக்க மாட்டான். அனுமதித்தாலும் அது மிக மிக தற் காலிகமே. எனவே இறுதிவரை தாக்குப்பிடித்த நின்று இன விடுதலை இலட்சியத்தைச் சாதிக்க இரகசிய கட்சி அமைப்பு முறையே தலைமை அமை

படிப்பகம்

www.padippakam.com



பாக இருக்க முடியும். இல்லையேல் எதிரியால் எந் நேரமும் நசுக்கப்பட்டு விடுதலை இயக்கம் அழிக்கப் படும்

எதிரிகள் :

அமெரிக்க, இரஷ்ய வல்லரசுகள், அதன் குட்டி நாடுகள், சிங்கள தமிழ் தரகு முதலாளிகள், நிலப் பிரபுக்கள்.

நண்பர்கள்

தமிழினத்தில் உள்ள தேசிய முதலாளிகள், உள்ளிட்ட உழைக்கும் மக்கள், சிங்கள இன உழைக் கும் மக்கள்.

தலைமை

சுயநிர்ணய உரிமையுடைய பாட்டாளி வர்க்கம்.

பாதை

ஓட்டுப் பாதையை நிராகரித்த போராட்டப் பாதை, மக்கள் யுத்தப் பாதை.

அமைப்பு

இரகசிய கட்சியை தலைமை அமைப்பாக கொண்ட பல வெளிப்படை அமைப்புகள்.

இவை அனைத்தும் விரிவான விவாதத்திற்குப் பின்னர் அவர் சொன்னார் இவர் சொன்னார் என்பதற் காக இல்லாமல் சுய புத்தியுடன் சரியான முடிவுகளை

படிப்பகம்

www.padippakam.com



எடுத்து நிதானமான நீண்டகாலத் தயாரிப்பில் (மக்களை அணி திரட்டுவதில்—மக்களுக்கு அரசியல் அறிவு புகட்டும் வேலையில்) முகாமையான கவனம் எடுத்து இயங்கவைக்கும் நோக்கில் இது வெளியிடப் பட்டுள்ளது.

அதிரடி நடவடிக்கை உணர்ச்சிவசப்பட்டு டாஸ் டூஸ் என்ற வீரதீரச் செயல் எதுவும் பயன் தராது. சமீபகால சம்பவங்கள் அதையே எமக்கு வலியுறுத்து கின்றது.

ஒத்த கருத்துடைய இயக்கங்களுடன் ஒத்துழைத்து (அதற்காக ஒரு முடிவும் இல்லாமல் ஒன்று சேர்வது அல்ல) எங்கள் கொள்கைத் திட்டத் திற்கும் அவர்களது கொள்கைத் திட்டத்திற்கும் என்ன வேறுபாடு, ஒற்றுமை என்பவற்றை ஆராய்ந்து எது சரி, எது பிழை என்ற முடிவுக்கு வந்து சரியான வழியில் தொடர்ந்து போராட்டத்தை முன்னெடுக்கும் அவசியத்தை உணர்ந்து இவ் வெளியீடு விரிவான விவாத, விமர்சனங்களுக்கு விடப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

★ இன ஒடுக்குமுறையை எதிர்த்து

★ நிலப்பிரபுத்துவ தரகுமுதலாளித்துவத்தை எதிர்த்து

★ ஏகாதிபத்திய ஊடுருவலை எதிர்த்து

*புதிய ஜனநாயகப் புரட்சியை மேற்கொள்வோம்.*

படிப்பகம்